**கலென்பிந்துனுவெவ பிரதேச சபை**
**அனுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 10 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுலை 13 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 மறுப்பு அபிப்பிராயம்

பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுகளுடன் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுகளில் வெளிக்காட்டப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்காய்வினால் காட்டப்பட்டிருப்பதன் படி எதிர்காலத்தில் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2017 ஆம் ஆண்டில் முத்திரை வரி வருமானம் ரூபா. 250,750 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா. 615,950 முத்திரை வரி வருமானமானமானது நிதிக் கூற்று அறிக்கையில் ரூபா 1,000,000 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 133,300 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | முத்திரை வரி வருமானம் சரியாக கணக்காக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2017 ஆம் ஆண்டின் முத்திரை வருமானம் ரூபா. 750,750 ஆக இருந்ததுடன் அத்தொகை பணமாக கிடைக்கப் பெறாததால் வருமானம் கணக்கீடு செய்யப்படாமல் பணமாக கிடைத்த பின் ரூபா. 750,750 கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டிற்கு சம்பந்தப்பட்ட பிடிவிராந்து மற்றும் தண்டப்பண வருமானம் ரூபா. 151,499 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | தொடர்புடைய வருடத்திற்கான மொத்த வருமானம் சரியாக கணக்காக்கப்பட வேண்டும். | வருடத்திற்கு சம்பந்தப்பட்ட விதிஆணைப்பத்திரங்கள் மற்றும் தண்டப்பண வருமானம் ரூபா. 3,867,153 ஆக இருந்தாலும் ரூபா. 151,499 தொகை மீளாய்வாண்டில் கணக்கு தயார் செய்யப்பட்டதன் பின் கிடைக்கப்பெற்றதோடு அந்த தொகை எதிர்காலத்தில் கணக்கீடு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | ‘புறநெகும’ செயற்திட்டத்தின் கீழ் துவங்கப்பட்டு சபைக்கு வழங்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 2 நிலையான சொத்தாக மூலதனமாக்கப்படும்போது ரூபா. 1,954,129 ஆக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | இருதிப் பற்றுச்சீட்டின் பெறுமதி சம்பந்தப்பட்ட சொத்தின் பெறுமதியாக கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். | ‘புறநெகும’ செயற் திட்டத்தினால் கிடைக்கப் பெற்றிருக்கும் தகவல்களின் படி கணக்கீடு செய்யப் பட்டிருக்கும் தகவல்கள் சரியானவையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. |
| ( iv) | மீளாய்வாண்டின் ரூபா. 9,724,392 பெறுமதியான சபைக்குச் சொந்தமான 8 சொத்துக்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட சொத்துக்களுக்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அல்லது கண்டரியப்பட்டு கணக்காக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் கணக்காக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கிறேன். |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதிக்கு சபைக்குச் சொந்தமாக இருக்கும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் 9 இற்கான பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிட நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்காக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் காணிகள் மற்றும் கட்டிடங்கள் 9 இற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு மதிப்பீடு செய்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டிருந்தும் இதுவரையில் மதிப்பீடு செய்யப் பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் இந்தக் காணிகள் மற்றும் கட்டிடங்களை சரியாக மதிப்பீடு செய்து கணக்காக்க நடவடிக்கை எடுப்பதாக தெறிவித்துக் கொள்ளப் படுகிறது. |

**(இ) நிகழத்தக்க பொறுப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குளங்கள் செயற் திட்டம் சம்பந்தமாக இன்னும் செலுத்த வேண்டிய ரூபா. 4,245,707 தொகை மற்றும் 2012 மே 1 ஆம் திகதிக்குப் பின் உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான வட்டியை கணக்கிட்டு அதன் படி நிகழத்தக்க பொறுப்புகள் நிதியறிக்கைகளில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகை மற்றும் 2012 மார்ச் 1 ஆம் திகதிக்குப் பின் உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான வட்டி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுகளில் வெளியிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2012 மார்ச் 1 ஆம் திகதிக்குப் பின் உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான வட்டியை கணக்கீடு செய்து பெற்றுத் தருவதாக நீதிமன்றப் பதிவாளர் வாய்மொழி மூலம் கொடுத்துள்ளார். எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட சட்ட ரீதியான வட்டி கணக்கிடப்பட்டு நிகழத்தக்க பொறுப்புகளாக நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கம் செய்யப்படும். |

**(ஈ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 8 கணக்குப் பிரிவுகளுக்கு சம்பந்தமான மீதிப் பத்திரங்களில் காட்டப்பட்டிருந்த பெறுமதி மற்றும் ஆவணங்களில் காட்டப்பட்டிருந்த பெறுமதிக்கும் இடையில் ரூபா. 4,025,077 வித்தியாசமொன்று நிலவியது. | சம்பந்தப்பட்ட மீதிகளின் வித்தியாசங்கள் தீர்க்கப்பட்டு கணக்குகள் சரியாக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையாக இருந்த நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம், , செலுத்தப்படாதிருந்த ஓய்வூய்தியங்கள் ,தொழில்துறை கடன் பற்றாக்குறை, ஓய்வூய்திய பணிக்கொடை, நானாவித கடன்கொடுத்தோர் வேறு வருமானங்கள் எதிர் காலத்தில் உள்ளடக்கம் செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2018 திசெம்பர் 31ஆந் திகதி முற்பணத் தொகை மற்றும் ஒதுக்க மீதி பரீட்சை நிலுவைக்கு அமைய ரூபா. 181,006,373 ஆக காட்டப்பட்டு ஐந்தொகையில் ரூபா. 18,100,637 குறிப்பிடப்பட்டிருந்ததனால் ரூபா. 162,905,736 வித்தியாசமொன்று நிலவியது. | கணக்குகள் ஒழுங்கமைக்கப்படும் போது நிலவும் அச்சுப் பிழைகளை சோதனை செய்து தகவல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | தெளிவுபடுததப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ஐந்தொகையில் ரூபா. 210,098,865 பெறுமதிக்குற் பட்ட குறிப்புகளின் உண்மையான தொகை ரூபா. 412,029,765 ஆக இருந்தாலும் ரூபா. 212,069,100 தொகை வித்தியாசம் காணப்பட்டது. | மீதிகளில் காணப்படும் இணங்காமைகள் சரியாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய ஊழியர் கடன் தொகை ஆவணங்களுக்கமைய ரூபா. 3,837,733 ஆக இருந்தாலும் நிதிக்கூற்றுகளில் ரூபா 3,766,466 ஆக காட்டப்பட்டிருந்ததால் ரூபா. 71,267 வித்தியாசமொன்று நிலவியது. | மீதிகளில் காணப்படும் இணங்காமைகள் சரியாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வருடத்தின் நிலுவையான தொகை மற்றும் கடன் மீதி ஒன்று சேர்க்கப்பட்டு நிதி அறிக்கைகளுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அது இட மாற்றம் பெற்றுச் சென்ற நபர்களின் 2018 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாகும். |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆம் திகதிக்கு வைப்பிலிருந்த ஆவணங்களில் காட்டப்பட்டிருக்கும் பெறுமதி ரூபா. 6,837,444 ஆக இருந்தாலும் நிதி கூற்றுக்களில் ரூபா. 2,062,295 ஆக காட்டப்பட்டிருந்ததனால் ரூபா. 8,842,739 வித்தியாசமொன்று நிலவியது. | அனைத்து வைப்புகளின் ஆவணங்களும் வருடாந்தம் புதிதாக பராமரிக்கப்படல் வேண்டும். | இவ்விடயம் தெளிவு படுத்திக் கொள்ளப்படல் வேண்டும். |

**(உ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா. 1,130,292 தொங்கல் கணக்கு மீதி ஆராய்ந்து பார்த்து தேவையான இடங்களில் பொருத்தபாடு செய்து தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தேவையான பொருத்தப்பாடுகள் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். |

**(ஊ) பெற வேண்டிய கணக்குகள் மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 65,960 பெற வேண்டிய 2 கணக்கு மீதிகள் 5 வருடங்களைத் தான்டியிருந்த போதும் அறவிடாது காணப்பட்டது. | பெறப்பட வேண்டிய மீதிகள் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீர் செய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 974,459 செலுத்தப்பட வேண்டிய 2 கணக்கு மீதிகள் 5 வருடங்களைத் தான்டியிருந்த போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய மீதிகள் தீர்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**(ஒ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 120,332,530 பெறுமதியான 10 கணக்குப் பிரிவுகளுக்குரிய சொத்துகளுக்கான ஆவணங்கள், மதிப்பீட்டுச் சான்றிதழ்கள், மெய்மையாய்வு அறிக்கைகள், பிரதி ஆவணங்கள், காலப் பகுப்பாய்வு, இருப்புக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான கடிதங்கள் மற்றும் விவரக் கோவைகள் முன்வைக்கப்படா மையால் கணக்கீட்டின் போது திருப்திகரமாக மெய்மையாதய்வு செய்ய முடியாமல் இருந்தன | நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் பெறுமதிகளை உறுதிப்படுத்த அவசியமான எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவை | | | |
| | 217 மற்றும் 218 ஆம் விதி | காணிகள் மற்றும் கட்டிடங்கள் சம்பந்தமான ஆவனமொன்றை பராமரிப்பதற்கும் வருடத்திற்கு ஒரு முறை பரிசீலனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆவனமொன்றை தயாரிக்காமல் இருந்தமை மற்றும் வருடாந்தம் பரிசீலனை செய்யாதிருந்தமை ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | 1647(இ) | வாகன பதிவேடொன்று பராமரிக்கப்படாது இருந்தது. | நிதி பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 அரச நிர்வாக சுற்றறிக்கை | எரிபொருள் தகன பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் தகன பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் பரிசோதனை செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2009 ஜுன் 17 ஆம் திகதிய 09/2009 (I) ஆம் இலக்க சுற்றறிக்கை | கைரேகையைப் பதியும் இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |
| (ஈ) | திறைசேரிச் செயலாளரின் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/2 திறைசேரிச் சுற்றறிக்கை | கணிணி உபகரணங்கள் மற்றும் மென்பொருள் சம்பந்தமாக நிலையான சொத்துக்களுக்கான புறம்பான பதிவேடொன்று பேணப்படவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிலையான சொத்துக்களுக்கான் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,769,582 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,138,909 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப் பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப பட்ட வருமானம் | 2017 பட்டியலிடப் பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப் பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,072,920 | 2,433,317 | 2,024,217 | 5,387,865 | 2,072,920 | 2,152,687 | 2,097,092 | 4,978,765 |
| (ii) | வாடகை | 5,557,250 | 5,410,420 | 5,666,955 | 95,770 | 4,097,020 | 4,955,892 | 4,868,572 | 352,305 |
| (iii) | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள | 5,331,000 | 4,546,902 | 4,389,652 | 157,250 | 5.283.000 | 3,309,848 | 3,309,848 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 3,158,000 | 7,104,001 | 2,155,270 | 7,271,827 | 1,874.100 | 8,091,848 | 9,557,269 | 2,323,096 |
| | மொத்தம் | 16,119,170 | 19,494,640 | 14,236,094 | 12,912,712 | 13,327,040 | 18,510,275 | 19,832,781 | 7,654,166 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு சேகரிக்கப்பட்டிருக்க வேண்டிய மொத்த வருமானம் ரூபா. 27,348,806 ஆக இருந்ததுடன் அந்த வருமானத்தில் நூற்றுக்கு 52 வீதமான சுமார் ரூபா. 14,326,094 மட்டுமே சேகரிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானங்கள் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இலக்கம் 15 இற்குறிய பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிராகாரம் சபைக்கு உரித்தான பிரதேசத்தின் அபிவிருத்திப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டு, வருடாந்த சொத்து மதிப்பீடொன்று நடாத்தப்பட்டு வரிப்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | சட்டப்பிரிவற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கலென்பிந்துனுவெவ நகராட்சிப் பிரதேசத்தில் வரிப்பணத்தை அறவிடுவது சம்பந்தமாக வரைபடமாக்கப்பட்டு வர்த்தமாணி அறிவித்தல் விடுக்கப்படவில்லை. இதனால் சொத்துக்கள் தடைவிதிப்பது சம்பந்தமாக குழப்பமான சூழ்நிலையொன்று உருவாகியுள்ளது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 59-66 வரையிலான விதியின் பிரகாரம் வியாபார அனுமதிப் பத்திரம், தொழில்சார் வரி, கைத்தொழில் வரிகளை அறவிட வேண்டிய நிறுவனங்கள் சம்பந்தமாக மதிப்பாய்வு அறிக்கையொன்று நடாத்தப்பட்டிருந்தாலும் அவற்றை | விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆவணப்படுத்தும் போது கட்டணங்கள் செலுத்தல் தவிர்ப்புச் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையின் ஆட்சிப்பிரதேசத்தின் விளம்பரப் பலகைகள் சம்பந்தமாக மதிப்பாய்வு செய்து அவை ஆவணப்படுத்தப்பட்டு கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்கின்றேன். இதற்காக பதவியணியினர் நியமிக்கப்பட்டுள்ளதோடு சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய பிரிவினரை இனங்கண்டு அவ் அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணங்கள் அறவிடப்பட்ட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | தொலைதொடர்பு கோபுரங்கள் சம்பந்தமாக மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு கட்டணங்கள் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுபட்டு கட்டணங்கள் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கின்றேன். உப விதிகளை தயாரிப் பதற்கான காரணத்தை உள்ளூராட்சித் திணைக்களத்துடன் இனைந்து கலந்துரையாடி, தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) செயல் நவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்றை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கை திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். ஏற்கனவே பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |

**(இ) எதிர்பார்த்த பலன்களைப் பெற முடியாதமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ருபா. 18,128,075 செலவு செய்து கட்டப்பட்டிருந்த அஸவயாபெந்தி வெவ நீர் செயற்றிட்டத்தின் கட்டுமானப் பணிகளில் மற்றும் பொருத்துதல் பணிகளில் தொழிநுட்ப தவறுறுகள் ஏற்பட்டதால் கணக்காய்வு செய்யப்படும் திகதியான 2019 மே 12 ஆம் திகதி வரையிலும் செயற்றிட்டம் செயற்பாடற்று காணப்பட்டது. | செயற்றிட்டங்கள் நடாத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன்.<br>செயற்றிட்டங்கள் விரைவாக நடாத்தப்பட ஏற்கனவே அடிப்படை வேலைகள் செய்யப்பட்டுள்ளன. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரல் குறித்து சபை அறிந்திருக்கவில்லை. | நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிந்து கொண்டு அதற்கமைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குளங்கள் செயற்திட்டம் சம்பந்தமாக நீதிமன்ற தீர்ப்பிற்கமைய சபையின் சொத்துக்கள் ஏலமிடப்பட்டதன் பின்னர் மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 4,245,707 ஆக காணப்பட்டது. மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பாக முகாமைத்துவம் குறிப்பிட்ட பிரிவினர்ளுடன் கலந்துரையாடி முறையானதொரு உடன்பாட்டிற்கு வந்திருக்கவில்லை. | சபை முகாமைத்துவம் மற்றும் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இந்த சீர் குலைவுகள் தொடர்பாக பொறுப்பு க்கூற வேண்டிய பிரிவினர்களிடமிருந்து நட்டத்தை அறவிடவும் , செலுத்தப்பட வேண்டிய தொகை சீர் செய்யப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 2019.06.21 ஆம் திகதி மகா சபை இது குறித்து சபை முடிவொன்றை பெற்றுக்கொண்டுள்ளது. அதற்கமைய இதற்காக நேரடியாக பொறுப்புக்கூற வேண்டிய வட மத்திய மாகாண பிரதான அமைச்சிற்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டு இது குறித்து பிரதேச சபையினால் அறவிடப்பட்ட தொகை அறவிடவும், ஒப்பந்த அமைப்பிற்கு மேலும் செலுத்தப்பட வேண்டிய தொகை வட மத்திய மாகாண சபையின் 2020 இற்கான வரவு செலவுத் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டு செலுத்தல் நடவடிக்கைகள் செய்யப்படுவது பொருத்தமானது என கோரிக்கை விடுப்பதற்கும் சபை தீர்மானம் எடுத்துள்ளது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான பதவியணியில் 13 வெற்றிடங்கள் இருந்ததோடு மேலதிகமான சேவையாளர்களின் எண்ணிக்கை 03 ஆகக் காணப்பட்டது. 06 பதவியணியினர்கள் உள்ளனர் என்பதும் வெளிக்காட்டப்பட்டிருந்தது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அவதானிப்பு ஏற்றுக்கொள்கின்றேன். அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 4 ஆக இருந்ததுடன் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் 2 தொழிநுட்ப உதவியாளர்கள் பதவிகள் சபையில் இணைக்கப்பட்டிருந்தனர். 6 சுகாதார ஊழியர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் சுகாதார ஊழியர் பதவிகளுக்கு 7 பேர் இனைக்கப்பட்டுள்ளனர். அதன் அடிப்படையில் 03 மேலதிகமான பதவிகள் இருப்பதாக குறிப்பிடுகின்றேன். சபையின் தீர்மானங்களுக்கு அமைய உள்ளூராட்சித் திணைக்களத்தின் பரிந்துரையுடன அமைய பதவிகளுக்கு பதவிகளுக்கு 06 பேர் இணைக்கப்பட்டனர். |
| (ஆ) | இடம் மாறிச் சென்று ஓய்வு பெற்றுச் சென்றிருந்த 16 அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஊழியர் பிணை சேமிப்புத் தொகையான ரூபா. 63,408 ஆனது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட மீதிகள் சீர் செய்யப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். 1991.11.03 திகதிக்கான இலக்கம் 04.∵.1999 அமைய வடமத்திய மாகாண பிரதான செயலாளரின் சுற்றறிக்கையை பின்பற்ற எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 கைப்பற்றப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 12 வாகனங்களின் உரிமைகள் கைப்பற்றப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை கைப்பற்றப்பட்டு கணக்காக்கப்பட வேண்டும். | பிரதேச சபையை சங்கடத்திற்கு ஆளாக்கியுள்ள நீதிமன்ற செயற்பாடுகளின் காரணமாக புதிதாக சொத்துக்களை சபைக்கு கைப்பற்றப்படுவது இது வரையில் |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் சபையின் முடிவு, உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் ஆலோசன்யின்படி செயற்படுத்தப்பட்டு கணக்கீட்டிற்காக சமர்ப்பிக்கப்படும். |

**3.4.2 செயலற்ற / பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் சபைக்குக் கிடைக்கப்பெற்ற ரூபா. 2,655, 318 பெறுமதியான WPRD-9486 இலக்கத்திற்குறிய டிராக்டர் வண்டி எந்த விதமான பயனும் பெறாது சபை வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. | தேவையான புதுப்பித்தல்கள் செய்யப்பட்டு சொத்துக்கள் பயனள்ளவாறு உபயோகிக்கப்பட வேண்டும். | இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதடன் போக்குவருத்துப் பொறியாளரிடம் பழுதுபார்பது தொடர்பான அறிக்கையொன்றை பெற்று, பழுதுபார்த்து, வழக்கத்தை போன்ற சேவையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.3 வருடாந்த பொருட்கள் / இருப்பு மதிப்பாய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு பொருட்கள் மதிப்பாய்வுக்கமைய அலுவலகத்திற்குள் 62 வகையான பொருட்களின் பற்றாக்குறையொன்று வெளிப்படுத்தப்பட்டது. | அந்த மீதிகள் தேடப்பட்டு சிர் செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் ஆராயப்பட்டு சிர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2014 மற்றும் 2016 ஆம் வருடங்களில் செய்யப்பட்ட பொருள் மதிப்பாய்வுகளில் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் அந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | கலென்பிந்துனுவெவ நூலகத்தில் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கணிணி ஆவனங்களுக்கு அமைய ரூபா. 120, 581 பெறுமதியான 1354 புத்தகங்கள் நிலுவையாக இருந்தது. | ஆராயப்பட்டு சீர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இதற்கான காரணங்கள் ஆராயப்பட்டு சிர் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும். |